# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.1

**Deposition of witness for }**

**Defence:**

**Case No.** Sessions Case No.121/2015

| | | | |
|---|---|---|---|
| **Name** | முருகேஸ்வரன் | **S/o.** | சிங்கமுத்து |
| **Village** | சித்தலூர் | **Taluk** | சிவகங்கை |
| **Religion** | இந்து | **Calling** | |
| **Date** | 13.07.2022 | **Age** | 34 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 10.03.2021.**

**முதல் விசாரணை:**

எனக்கு சொந்த ஊர் சித்தலூர் ஆகும். நான் சிவகங்கை காளவாசல் பாரதிநகரில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகள் அனைவரையும் தெரியும். எனது தகப்பனார் பெயர் சிங்கமுத்து, எனது தாயார் பெயர் முத்துராமு ஆகும். உடன்பிறந்தவர்கள் 3 மூத்த சகோதரிகளும் 1 மூத்த சகோதரனும் உள்ளனர். லதா, தீபா, ரூபா ஆகிய 3 சகோதரிகளும், வாச்சாரக்காளை என்ற மூத்த சகோதரனும் உள்ளனர். இதில் ரூபா என்ற 1 மூத்த சகோதரி இறந்துவிட்டார். எனக்கு திருமணம் ஆகவில்லை. எனது அண்ணனுக்கு புதுக்குளத்தில் திருமணம் ஆகியுள்ளது. 1வது எதிரி மகாதேவனுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் நடைபாதை பிரச்சனை சம்பவத்திற்கு 2 வருடங்களுக்கு முன்பாக இருந்துவந்தது. சம்பவத்திற்கு 4 நாட்களுக்கு முன்பு எனது அம்மாச்சி மீனாட்சியை எதிரி பஞ்சவர்ணம் பாதை பிரச்சனை சம்மந்தமாக விளக்குமாற்றால் அடித்துவிட்டாள். 31.07.2012 அன்று காலை 11.00 மணியளவில் எனது சகோதரி ரூபா நினைவு நாளுக்கு சாமி கும்பிடுவதற்காக எங்களது சுமோ காரில் சிவகங்கையிலிருந்து சித்தலூருக்கு சென்றோம். நாங்கள் சென்ற சுமோ கார் நம்பர் TN65E6764 ஆகும். அந்தக்காரில் நான் எனது அம்மா எனது அக்கா தீபா எனது அண்ணன் வாச்சாரக்காளை ஆகியோர் சென்றோம். நாங்கள் ஊருக்குச்சென்று காரை விட்டு இறங்கும்போது 1வது எதிரி மகாதேவன் எங்களை பார்த்து இந்த தேவிடியா மகன்களை குடும்பத்துடன் குத்திக் கொல்லுங்கடா என்று கூறினார். அப்பொழுது அவருடன் 2 முதல் 6 எதிரிகள் இருந்தார்கள். எனது அம்மா காரிலிருந்து இறங்கும்போது எதிரிகள் பஞ்சவர்ணமும் அழகுமலையும் எனது தாயாரை பிடித்துக் கொண்டார்கள். 1வது எதிரி மகாதேவன் எனது தாயாரை வேல்

கம்பால் இடது பக்க விலாவில் மாறி மாறி இருமுறை குத்தினார். அடுத்து என் அண்ணன் காரை விட்டு இறங்கினார். அப்போது 3வது எதிரி ராஜ்குமார் எனது அண்ணனை கத்தியால் இடது பக்க விலாவில் குத்தினார். 4வது எதிரி செல்லதுறை கம்பியால் எனது அண்ணன் தலையில் அடித்தார். 5வது எதிரி முத்துப்பாண்டி கம்பால் எனது அண்ணன் தலையில் இடது பக்கம் அடித்தார். எனது அண்ணனுக்கு ரத்தம் வந்தது. நான் காரை விட்டு இறங்கினேன். எனது அண்ணனை பிடிக்க வருவதற்குள் 3ம் எதிரி ராஜ்குமார் அதே கத்தியால் எனது இடது விலாவில் குத்திவிட்டார். உடன் எனது சகோதரி லதா, மாமா முத்துக்கருப்பன், மாரிமுத்து, தீபா, முத்துக்குமார் ஆகியோர் ஓடி வந்தார்கள். அதே காரில் எனது அம்மா, அண்ணன் வாச்சாரக்காளை எனது அக்கா, நான் அனைவரும் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அங்கு மருத்துவர் பரிசோதனை செய்து எனது தாயார் இறந்து விட்டதாக கூறினார். எனது அண்ணனை இங்கு பார்க்க முடியாது என்றும் மதுரை பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தார்கள். அதன் பிறகு நான் சிவகங்கை தாலுகா காவல்நிலையம் சென்று நான் புகார் சொல்லச்சொல்ல அங்கிருந்த காவலர் எழுதினார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுதான் நான் கொடுத்த புகார் மனுவாகும். அதில் நான் கையெழுத்திட்டுள்ளேன். அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வேல் கம்பு தான் 1வது எதிரி மகாதேவன் வைத்திருந்தது. அந்த வேல் கம்பு அ.த.சா.பொ.1 ஆக குறியிடப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கத்தி 3வது எதிரி ராஜ்குமார் வைத்திருந்தது. அந்தக்கத்தி அ.த.சா.பொ.2 ஆக குறியிடப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கம்பி 4வது எதிரி செல்லத்துரை வைத்திருந்தது அந்தக் கம்பி அ.த.சா.பொ.3 ஆக குறியிடப்படுகிறது. இது சம்மந்தமாக காவல்துறையினர் காவல்நிலையத்தில் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு கு.வி:</u>

பாரதி நகரில் 20 வருடமாக குடியிருக்கிறோம். பாரதிநகர் வீட்டில் நான் என் அம்மா, அப்பா, அண்ணன், அக்கா எல்லோரும் ஒன்றாகத்தான் இருந்தோம். வாச்சாரக்காளை என் அண்ணன். தீபா என் அக்கா, மீனாட்சி என் அம்மாவழிப் பாட்டி அம்மாச்சியாவார், லதா என் மூத்த அக்கா, லதாவை முத்துக்கருப்பன் திருமணம் செய்திருக்கிறார். என் தாய் மாமா மாரிமுத்து. முத்துக்குமார் என்பது என் மாமா மகன். சிங்கமுத்து என் அப்பா. பாரதிநகருக்கும் சித்தலூருக்கும் 15கிமீ இருக்கும். எனது வாச்சாரக்காளை ராஜா இன்ஜினியரிங் காலேஜில் படித்தார். நான் 8ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். சித்தலூரில் எங்களுக்கு சொந்தமாக இடமிருக்கு என்று காட்ட காவல்துறையினரிடம் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. என் சகோதரி லதாவை திருமணம் செய்த முத்துக்கருப்பன் 2ம் எதிரி பஞ்சவர்ணத்தின் தம்பி ஆவார். 2ம் எதிரி பஞ்சவர்ணத்தின் அக்கா மகள் நித்யாவை எனது உறவினர் பாண்டி மகன் ஐயப்பனுக்கு பெண் கேட்டு கொடுக்க மறுத்து அவரை 5வது எதிரிக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சித்தலூரில் எந்தப்பக்கம் உப்பாறு செல்கிறது கண்மாய் எந்தபுறம் உள்ளது என்று எனக்கு தெரியும். அந்த ஊருக்கு எத்தனை முறை போய்ருக்கீர் என்று கேட்டாள் அன்று கோயிலுக்கு சாமி கும்பிட மட்டும் போனோம். ரூபாவிற்கு சாமிகும்பிட போனோம் என்று பெயர் குறிப்பிட்டு புகாரில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். ரூபா என்பது எனது அக்கா. எந்த தேதியில் எந்த ஊரில் என் அக்கா பிறந்தார் என்று போலீசார் கேட்கவில்லை. எந்த தேதியில் ரூபா இறந்தார் என்ற குறிப்பு எதும் இருக்கிறதா

என்றால் தெரியாது. என் அக்கா அவர் சிறுவயதிலேயே காலமாகிவிட்டார். எனது அக்காமார்கள் எனக்கு 2, 3 வயது மூத்தவர்களாக இருப்பார்கள். எங்களுக்கு சித்தலூரில் ஒரு வீடு வாங்க வேண்டும் என்று எனது அக்கா லதா, மாமா முத்துக்கருப்பன், தாய்மாமா மாரிமுத்து, தாய்மாமா மகன் முத்துக்குமார் ஆகியோர் முயற்ச்சி செய்து 1வது எதிரியுடன் பேச்சுவார்த்தை நடத்தி அது முடியாது என்று மறுத்துவிட்டார்கள் என்றால் அப்படி ஏதும் நடக்கவில்லை. 1வது எதிரி வீட்டை விலைக்கு விற்க மறுத்த போது என்னுடைய உறவினர்கள் அவர்களுடன் சண்டைபோட்டு ஓட்டு வீட்டை இடித்துவிட்டார்கள் என்றால் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கானது என்றால் சரியல்ல. நாங்கள் எந்த தேதியில் என் சகோதரி ரூபாவிற்கு நினைவுநாள் கொண்டாடுவோம் என்று எதிரிகளுக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்கள் சம்பத்தின்போது டாட்டாசுமோ காரில் சென்று எதிரிகளின் வீட்டு வாசலில் எங்கள் வாகனத்தை மறித்து நிறுத்தினோம் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டு வாசலில் தான் நிறுத்தினோம். அந்த இடத்தில் எங்களுக்கு வீடே கிடையாது என்றும் வழக்கிற்காக எங்கள் வீட்டு வாசலில் நிறுத்தினோம் என்றால் சரியல்ல. நாங்கள் போகும்போது எங்கள் உறவினர்கள் இடித்துப்போட்ட எதிரிகளின் வீட்டை அவர்கள் எடுத்துக்கட்டிக் கொண்டிருந்தனர் என்றால் சரியல்ல. நாங்கள் போய் நிறுத்திய வீட்டு வாசலில் இரும்பு கேட் இடிந்து கீழே தான் இருந்தது என்றால் சரியல்ல. அந்தமாதிரி கம்பிகேட்டில் மேலே வேல்கம்பு டிசைனில் அலங்காரம் செய்து வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. அந்தக் கதவிலிருந்த வேல் அலங்காரம் ஒவ்வொன்றுக்கும் 10செமீ இடைவெளி இருக்கும் என்றால் சரியல்ல. அவ்வாறு தான் இருக்கும் என்றாலும் அதை தெரிந்துகொண்டே வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. சித்தலூரில் என் இனத்தை சார்ந்தவர்கள், பிள்ளைமார் சமூகத்தை சார்ந்தவர்கள், ஹரிஜன சமூகத்தை சார்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்றால் எனக்குத் தெரியாது. சித்தலூர் எந்த திசையில் துவங்கி எந்த திசையில் முடிகிறது என்று கேட்டால் எனக்கு தெரியும். மெயின்ரோட்டில் கிழக்கு திசையிலிருந்து 1500 அடி தூரத்தில் சித்தலூர் உள்ளது. அந்த ஊரில் என் உறவினர்களை தவிர மற்றவர்களும் இருக்கிறார்கள். தொடக்கப்பள்ளியும், உயர்நிலைப்பள்ளியும் உள்ளது என்றால் சரிதான். துவக்கப்பள்ளியிலிருந்து மதியம் 11.00 மணியளவில் சிறுபிள்ளைகள் பெற்றோருடன் வருவதும்போவதும் உள்ளது என்றால் இல்லை. உயர்நிலைப்பள்ளி அருகில் கடைகள் உள்ளது என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. அந்த ஊரின் கிழக்குப்பக்கம் எந்த கோவில் உள்ளது என்றால் சடச்சியம்மன் கோவில் உள்ளது. சடச்சியம்மன் கோவிலுக்கு செல்லவேண்டும் என்றால் நான் வாகனத்தை நிறுத்திய இடத்தில் தான் செல்லவேண்டும் என்றால் இல்லை. வலது பக்கமாக சடச்சியம்மன் கோவிலுக்கு செல்லவேண்டும். சடச்சியம்மன் கோவில் ஊரைத்தாண்டி ஊர் மந்தையில் உள்ளது என்றால் சரிதான். அன்று சடச்சியம்மன் கோவிலில் எந்த விழாவும் நடைபெறவில்லை. நாங்கள் சாமிகும்பிட போனது எங்கள் குடும்பத்தாரை தவிர வேறு யாருக்கும் தெரியாது. நாங்கள் அன்றைய தினம் சாமிகும்பிட போகவில்லை என்றும் எதிரிகளின் வீட்டை அடித்து தாக்க தான் சென்றோம் என்றால் சரியல்ல. சாமி கும்பிட என்ன என்ன பொருள் வாங்கிட்டு போக வேண்டும் என்று எனக்கு தெரியும். இந்த சம்பவம் நடந்திருப்பதால் சாமி கும்பிடாமலேயே திரும்பிவிட்டோம். நாங்கள் போலீசாரிடம் புகார் கொடுக்கும்போது சாமிகும்பிட வாங்கிய பொருட்களை காண்பித்து சாமி கும்பிட தான் போனதாக கூறவில்லை. அந்த பொருட்கள் சம்பவ இடத்திலேயே சிதறி போயிவிட்டது.

மாலை, எலுமிச்சை, சந்தனம், குங்குமம் வாங்கி சென்றோம். சம்பவம் இறங்கியவுடன் 1/4 மணி நேரம் நடந்தது. 1/4 மணிநேரமும் என் அக்கா தீபா காருக்குள்ளேயே இருந்தார். என் அம்மா குத்துப்பட்ட பிறகு என் அண்ணன் சென்றார், பிறகு நான் சென்றேன், பிறகு தான் என் அக்கா வந்தார்கள். அன்று ஊரில் மக்கள் இல்லை. கண்மாய் வேலைக்குச் சென்றிருந்தனர். பொதுவாக 100 நாள் வேலை திட்டத்திற்கு பெண்கள் தான் செல்வார்கள். ஊரில் ஆண்கள் எங்கிருந்தார்கள் என்றால் யாரும் 1/4 மணிநேரத்தில் வீட்டை விட்டு வரவில்லை. நான் என் அம்மா, என் அண்ணன் மூவர் மட்டும் தான் சென்றோம் என்றால் சரியல்ல. தீபாவும் வந்தார். அன்று என் தகப்பனார் சிங்கமுத்து சம்பவ இடத்திற்கு வரவில்லை. என் தகப்பனாரும் சாமி கும்பிடுவார் என்றால் சரிதான். நான் சொல்வதைப்போல நினைவு நாள் அன்று சாமி கும்பிடவில்லை என்றும் அதனால் தான் என் அப்பா வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மாச்சி மீனாட்சி அவர்கள் வீட்டில் இருந்தார். சித்தலூரில் எதிரி புறம்போக்கு இடத்தில் வீடு கட்டியிருக்கிறார் என்றால் அது எனக்குத் தெரியாது. எதிரியிடமிருந்து அந்த வீட்டை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நானும் என் அண்ணனும் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றாலும் அது தெரியாமல் என் தாயாரும் என்னுடன் வந்தார் என்றால் சரியல்ல. வேண்டுமென்றே அவர்களுடன் தகராறு செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் 15 கிமீ தள்ளியிருக்கும் அந்த இடத்திற்கு நாங்கள் சென்றோம் என்றால் சரியல்ல. 1ம் எதிரி மகாதேவன் எனக்குத்தெரிந்து அந்த வீட்டில்தான் குடியிருக்கிறார். நான் பிறப்பதற்கு முன்பு எத்தனை காலம் குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. ஆனால் அந்த இடத்தில் என் தகப்பனார் சிங்கமுத்துவிற்கோ, எனது சகோதரன் வாச்சாரக்காளைக்கோ எனக்கோ வீடோ, இடமோ இருக்கிறது என்பதை காட்டக் கூடிய ஆவணம் ஏதும் கிடையாது சாட்சி மீண்டும் எங்கள் வீட்டிற்குதான் சென்றோம் என்று சொல்கிறார். அக்கா லதா முரசுப்பட்டியில் குடியிருக்கிறார் என்றால் இல்லை அவரும் சிவகங்கையில் தான் இருக்கிறார். எனது மாமா முத்துக்கருப்பனின் ஊர் முரசுப்பட்டி என்றால் இல்லை அவர் ஊர் சித்தலூர் தான். அன்று சாமி கும்பிடுவதற்காக சித்தலூர் சென்றிருந்தார்கள். அக்கா லதாவும் சித்தலூரில் எங்கள் வீட்டில் தான் இருந்தார். அதன் பின் சிவகங்கை வந்துவிட்டார். அவர்கள் சிவகங்கை வந்து 15 வருடம் இருக்கும். சித்தலூரில் இருந்த எங்கள் வீட்டின் கதவு நம்பர் எனக்கு ஞாபகமில்லை. எனக்கு அந்தமாதிரி வீடே கிடையாது என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அன்று 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் வேலை நடந்த நாள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி இந்த சம்பவம் எதிரிகளால் செய்யப்பட்டிருந்தால் தெருவில் நடந்த சம்பவத்தைப்பார்த்து பொது மக்கள் சாட்சி சொல்ல வந்திருப்பார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் உண்மையை சொல்வார்கள் என்ற காரணத்தினால் அவர்களை விட்டு விட்டு என் குடும்ப உறுப்பினர்களை மட்டும் வைத்து சாட்சியாக போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மாவிற்கு மூச்சிறைப்பு உண்டு என்று சொன்னால் சரியல்ல. அங்கு கட்டிடம் கட்டிக்கொண்ட இடத்தில் நானும் என் சகோதரனும் தள்ளுமுள்ளு செய்ததில் என் தாயாரை கம்பிக் கதவில் தள்ளிவிட்டுவிட்டோம் என்றும் அவ்வாறு தள்ளி விட்டதில் தான் அவர்களுக்கு காயம் ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. வாச்சாரக்காளைக்கும் எனக்கும் சம்பவ இடத்தில் எந்தக் காயமும் ஏற்படவில்லை என்றும் இந்த வழக்கிற்காக என் தாயார் இறந்துவிட்டது தெரிந்த பிறகு மதியம் 12.30 மணிக்குமேல் பாரதி நகரில் வைத்து ஏற்படுத்தப்பட்ட

காயம் என்று சொன்னால் சரியல்ல. இங்குள்ள சான்றுப்பொருள்களுக்கும் சம்பவத்திற்கும் சம்மந்தம் கிடையாது என்றால் சரியல்ல. சான்றுப்பொருள்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. மருத்துவர்கள் எப்படி இந்தக்காயம் ஏற்பட்டது என்று கேட்டதற்கு நாங்கள் தான் செய்தோம் என்று சொல்லாமல் எதிரிகள் மீது பழியைப்போட்டுவிட்டோம் என்றால் சரியல்ல. ஏன் அந்த இடத்திற்கு சென்றோம் என்று கேட்டால் காரணம் சொல்வதற்காக பின்யோசனையின் பேரில் நினைவு நாள் என்று சொன்னோம் என்றால் சரியல்ல. சித்தலூரில் எங்கள் குடும்பத்தைச் சார்ந்த மூதாதையருக்கு சமாதி ஏதும் கிடையாது. சித்தலூருக்கும் எங்களுக்கும் உணர்வுப்பூர்வமான தொடர்பு எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது சாமி கும்பிடச்செல்லவில்லை என்றாலும் எதிரிகளுடன் சண்டையிட சென்றோம் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் தாயாருக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரிகளால் ஏற்படவில்லை என்றும் எங்களால் தான் ஏற்பட்டது என்றால சரியல்ல. நானும் அம்மாவை தள்ளிவிடுவோம் இப்படி ஒரு காயம் ஏற்படும் என்று எதிர்பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு காயம் ஏற்பட்டவுடன் என் தாயாரை சம்பவ இடத்திலிருந்து அழைத்துச் சென்றுவிட்டோம் என்றாலும் நான் சொன்னது போல் 15 நிமிடம் அங்குசம்பவம் ஏதும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மாவிற்கு காயம் ஏற்பட்டவுடன் நாங்கள் கூச்சலிட்டதில் அந்த ஊரில் உள்ள அனைவரும் அங்கு கூடிவிட்டார்கள் என்றால் சரியல்ல. அந்த ஊரில் அனைத்து வீடுகளும் அருகருகில் தான் உள்ளது என்றால் சரிதான். அன்று நடந்த சம்பவம் ஊரில் உள்ள அனைவருக்கும் தெரியும் என்றும் உண்மையை மறைக்கின்ற காரணத்தினால் எனது உறவுக்காரர்களை வைத்து இந்த வழக்கை சித்தரித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. இந்த ஆயுதங்களை எதிரிகள் பிரயோகப்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்காக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. புகாரை நான் சொல்லச்சொல்ல போலீசார் எழுதினார். இந்தப் புகாரை கொடுப்பதற்கு முன்னாள் என் அப்பாவை அரசு மருத்துவமனையில் பார்த்தேன். அவருடன் ஆலோசனை செய்து தான் இந்தபுகார் சித்தரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்தப்புகாரில் சொல்லியுள்ளது போல் சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.